NIR

IN MEMORIAM

Elijah Devasigamoni Shastriar.

EVANGELICAL POET.

TANJORE.

Died 9th September 1908 at Madras.

R. I. P.

எபேசியர் 13 : 7.

[illegible]

PRINTED BY HIS SON

Rev. Elijah Vedanayagam,

S. P. G., Tanjore.

TANJORE:
G. S. MANIYA & Co.
1908

NOTE.

Our best thanks are due to M. R. Ry. Gnanathicam Samuel Pillai, Telegraph Department of Bombay, who has presented Half-tone Block of the likeness of the Venerable Vedanayaga Shastriar, as his tribute to Shastriar's Memory.

THE EVANGELICAL HALL,
TANJORE,
September, 9th 1909.

Venerable **VEDANAYAGA SHASTRIAR**,
EVANGELICAL POET, TANJORE.

BORN THE 7 SEPTEMBER 1774 IN TINNEVELLY,
DIED THE 24 JANUARY 1864 AT TANJORE.

SRI VANI VILAS PRESS, SRIRANGAM.

Venerable, V. ELIJAH DEVASIGAMONI SHASTRIAR,
EVANGELICAL POET, TANJORE.
Born the 26 November 1834 in Tanjore.
Died the 9 September 1908 in Madras.

SRI VANI VILAS PRESS, SRIRANGAM.

- 9 - 3

IN MEMORIAM OF

Late Elias Devasigamoni Shastriar,

AN ARTICLE BY

Rev. W. H. Blake S.P.G. Tanjore,

TO

MADRAS DIOCESE, QUARTERLY REPORT

No. XCV. OCTOBER 1908.

THE S. P. G. Congregation, Tanjore, had another great loss a few days before the death of Mr. Manuel by the death suddenly at Madras of Elias Devasigomoni Shastry, the last son of Vedanayaka Shastry, the Tanjore Poet.

He had gone to Madras a fortnight previously on account of the serious illness of his nephew Mr. Senathipathi Pillai Hospital Assistant, whose illness proved fatal. But remaining in Madras a few days after the funeral to visit some of the christian families there, he was himself unexpectedly taken ill on the night of the 8th September and expired the next morning with only his nephew's son to attend upon him. Entirely resigned to

God's will, as always through life, and while engaged in his morning devotions and his daily scripture portion was being read to him, he fell asleep in the Lord. He will be much missed by the Tanjore congregation as he was very diligent in visiting them, especially in time of sickness, and on the occasion of a death he kept watch over the body and never left the house until the funeral took place. He was thus a great comfort and help to them. In Advent and Lent, on Sundays and Holidays he always held special Bajanci-preaching in his Evangelical Hall, but never so as to interfere with the Church services which he always regularly attended.

Upto the time of his death, although 74 years of age, he got up every morning at 4 P. M. and took his bath and watered and worked in his garden till time for family prayers. In the day time he was often out preaching and distributing tracts and where-ever he went at whatever time of the day, he always walked and never used a bandy. At night until late he sat up reading or engaged in devotion. He was very kind-hearted,

humble minded, and charitable and many poor received help, and many strangers visiting Tanjore found shelter under his roof. He had recently been engaged in getting his father's poetical works reprinted, in accordance with a suggestion of Dr. Pope's in the preface to his translation of Manichavasagam. But he himself had something of his father's poetical genius and completed his father's Kuruvanchi. He also composed a poetical version of the Acts of the Apostles and an elegy on his father's death and poems on other special occasions. One of these was on the occasion of the Emperor's visit as Prince of Wales to Madras in 1875. This His Royal Highness graciously allowed Elias Shastry and his family to sing to him and he also accepted at the same time a copy of Vedanayaka Shastry's "Jebamalei." He was buried in the C. M. S. cemetry at Washermanpet by the side of his nephew. He leaves a widow and six children all married, his three sons being all employed in the S. P. G. Mission.

A correspondent writes :—

We deeply regret to inform the reader of the Christian Patriot of the unexpected death of Elias Devasigamoney Shastriar in Madras on Wednesday the 9th September aged 74 years.

He was the third son of the renowned Vedanayaka Shastriar, the Evangelical Poet of Tanjore. He was the only surviving son of the venerable Poet. Walking in the footsteps of his pious father who strictly commanded all his sons to devote their lives to the Lord's service by preaching the Gospel to the Hindus as well as Christians with the accompaniment of the numerous lyrics he had composed for that purpose. Elias Shastriar had the Poetical gift of his father and during his life-time composed many songs and lyrics on the life of Christ. He was the means of bringing to light several publications, lyrical and poetical compositions of his father who had left all

his works purely in manuscripts with a view to get the remaining works of Vedanayaka Shastriar patronized by the Christian community, he left Tanjore last month, on an Evangelical tour to Madras where he suddenly fell a victim to the fatal epidemic that is now prevalent in Madras. Although he was separated from his wife and children, in his last moments he prepared himself most suitably for his end by reading the Bible and the appropriate songs of his father concerning death. Soon after he expired, Rev. G. Samuel, the Lutheran Poster at Tiruvallor and the son-in-law of the deceased was on the spot to arrange for the funeral and on the arrival of his aged wife and the eldest and last sons, the remains were interred on the next day at 3 P. M. in the C. M. S. Cemetry.

THE CHRISTIAN PATRIOT VOL. XIX No. 45.

Madras Saturday 7th Nov. 1908.

The late Mr. Elias Devasigomoney Shastriar of Tanjore.

Mr. Elias Devasigomoney Shastriar was the last son of Mr. Vedanayaka Shastriar, the well known Christian Poet of Tanjore. He was born on the 29th November 1834. He was fondly attached to his father and was working with him, assisting him, in the composition of famous Christian lyrics, hymns, psalms and doxologies in Tamil, which form the earliest and best productions of a truly converted and pious devotee of our Lord Jesus Christ. The deceased led a life of Christian usefulness by doing evangelistic work in his own place and outside the city of his birth—in the province of Mysore, in the Nilgri, Madura, Tinnevelly Districts and other parts of Southern India from Tuticorin to Madras. He preached in prose among the Hindu Circles. His love to his relatives and friends,

his civility to those he came in contact, his loving sympathy to the poor, his consoling words of tenderness and prayer for the sick and dying, these formed the natural features of his life. He was a Christian of untiring prayerful spirit.

The latest service of importance which the deceased undertook to do, was to bring to light the poetical productions of his learned father, for long these were kept unpublished and when the desire of the Rev. Dr. Pope to get them published was announced to the deceased, through the Rev. Mr. Blake of Tanjore, he (the deceased) spared no pains to have them brought out in a book form "Japamalai" is the appropriate title by which the works of the learned Mr. Vedanayaka Shastriar is known to the Christians of Southern India.

Many of the songs are also embodied in the Tamil Christian Lyrics compiled by the Rev. E. Webb and the Rev. G. S. Washburn D. D. and recently edited in an enlarged form by the Rev. J. S. Chandler of the American Madura Mission, One who reads these songs

cannot but be struck with the nobility of thought and purity of style and more than these the deep-seated faith of the learned poet in the all-embracing grace and love of our Divine Saviour and Lord Jesus Christ. A few weeks before his death, Mr. Elias Devasigomoney Shastriar went to Madras to pay a visit to his brother's son-in-law Mr. Sanapathy Pillai who was then ill, but died since. While he was there consoling the bereaved family and preaching the word to those with whom he happened to come in contact, his useful life ended most unexpectedly on Wednesday the 9th of September last. His remains were interred next day in the Washermanpet Cemetry by the Rev. Mr. Bunnian of the C. M. S. Church.

S. SAMINATHEN.

1. *25 Walton Well Street, Oxford,*
October 4th, 1906.

Dear Shastriar,

I am much obliged to you for the copies you have sent me of your father's verses. I have always admired them and shall be glad to assist in their further publications. I have ordered my Banker to send you the equivalent of 15 rupees as my donation. I would send you more If I were able. I am sending your letter to my son Dr. T. H. Pope.

When I was in Tanjore.....
.....as I drew near the end I feel nothing but love for all. I do earnestly hope that all our fellow Christians may draw nearer to one another and to our great Master. We desire to build up a pure and holy church for HIS Glory. May HIS spirit rest on you all and lead you into all Truth.

Believe me,
Yours very faithfully,
(Signed). G. U. POPE.

---

2. I have pleasure in stating that Elias Devasigamoney Sastriar gave his Lyrical Entertainment here last evening before a few friends He seems earnest in his method of preaching combining music with exposition of Divine Truth and his efforts seem calculated to reach the native mind.

(Sd.) A. ACHESON OF WILLIAMS,
CHAPLAIN OF,
Feb. 11th, 1881. *Madura.*

---

3. Mr. Elias Devasigamony Shastriar son of the celebrated Evangelical Poet has given these Lyrical Entertainments in three different places of the town of Tuticorin and preached upon Christianity being the only Divine Religion, the death of Christ being the only atonement for sin and upon the last Judgement and delivered his speeches with a mixture of suitable illustrations and similes so as to attract the notice of Hindus, Muhamadans, and Christians who were assembled in large numbers to hear him. This mode of preaching having a peculiar

influence for good deserves every encouragement as it materially helps the Evangelical work.

(Sd.) S. DEVASAHAYAM,

22nd September, 1881. } NATIVE PASTOR. S. P. G. *Tuticorin.*

---

4. Elias Devasigamoney Sastriar entertained my Bible class for non-Christians with his Lyrical preaching on Sunday the 16th instant. I have much pleasure in stating that his address was much appreciated by our non-Christian friends who listened to him with rapt attention.

(Sd.) JACOB GNANAOLIVU,

Trichinopoly, Nov. 19th, 1890. } *Vice-Principal, S. P. G. College.*

---

5. Elias Devasigomony Shastriar gave a service of song to the Native congregation of St. George's Church Madura, on the 23rd Septem-

ber 1891. The service seemed to be much appreciated by the Native Christians.

25th September, 1891. } (Sd.) S. H. JOHNSTON, A. C F. CHAPLAIN, MADURA, and S. DEVASAGAYAM,

Native Priest, St. George's Church, Madura.

Salem,

September 7th 1905.

6. It may be too much to say that the late Poet of Tanjore and his sons are in a way prophets of the Tamil Christian community dispersed in several places; particularly as it has become a hereditary office in the family without any reference to requirements and gifts. Still one is bound to bear testimony to the awakening and keeping up of the Religious fervour in the said community by the itenerating work of the several members of the family repeated periodically. For the past three weeks Mr Elias Pillay commonly known as Elias Devasigamony Shastriar was making himself useful in Salem in holding prayer meetings for Christians and Bajanai Preaching to Hindus. He is a very old and

respectable person. It is instructive to see how wonderful are the ways of Providence in that man of his age and very simple habits go about travelling so much and doing some work of God.

(Sd:) N. GNANAPPRAHASAM,
S. P. G.

Sankaridrug,
30—9—05.

7. M.R.Ry, Elias Devasigamoney Shastriar Avergal son of the late famous Vethanayaka Sastriar of Tanjore, assisted by his daughter Vethamoney Ammal gave us a Bajanai exposition last night in the London Mission chapel of this place. We were all edified by his lucid exposition of the old story of the saviour love. We can only praise God for the memory of the late Vethanayaka Shastriar and for the work that is being done by his children. We all wish Mr. Elias Devasigamoni Shastriar and his family all success in the noble work they are doing.

(Sd.) J. I. CHRISTMAS PILLAI,
Ag. Dy. Tahsildar.

தருசை பரிசுத்த பேதுருவின் ஆலயத்தில் திரித்து வத்தின் பண்டிகைக்குப்பிந்தின 13-ம் ஞாயிறு 1908ஹ் செப்டேம்பர்மீ 13ஒ கனம் J. விசுவநாதம் ஐயரவர்கள், கனம் எலியா தேவசிகாமணி சாஸ்தியாரவர்களின் மரணத்தின்பேரில் செய்த பிரசங்க சுருக்கம்.

ஆதியாகமம், 45-27.

"தன்னை ஏற்றிக்கொண்டு போகும்படி யோசேப்பு அனுப்பின வண்டிகளை, அவன் கண்டபோது, அவர்களுடைய தகப்பனை யாக்கோபின் ஆவி உயிர்த்தது".

கடந்த 1900 வருஷங்களாக, மெய்யான யோசேப்பு இருக்கும், நல்ல தேசத்திற்கு, அநேக பிரயாணிகள் போய் இருக்கிறார்கள். பரம பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படி செய்து, கிறிஸ்துவுக்கு சகோதரரும், சகோதரிகளும், தாயும், தகப்பனுமான, அநேகர், அவர்கொடுத்த கிருபையின் எத்தனங்களாகிய, வண்டிகளின் மூலமாய், நல்ல தேசமாகிய கோசேனுக்குச் சென்று, தேசத்தின் கொழுமையான வைகளைச் சாப்பிடுகிறார்கள். ஆம்: ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடு பந்தியிருக்கிறார்கள்.

நாமும் அவர்களுடைய மாதிரியை பின் பற்றுவோமாக, திருச்சபையில் நமக்குக் கொடுக்கப்படும் கிரு

பையின் எத்தனங்களாகிய வண்டியில் ஏறி, வழிக்கு நமக்குக் கொடுக்கப்படும் ஞான ஆகாரத்தைச் சாப்பிட்டு, நமது பிரயாணத்தை நடப்பிப்போமாகில், நாமும் கொழுமையான தேசமாகிய, பரதீசுக்குள் பிரவேசிப்பதற்குச் சந்தேகம் இல்லை என்று அறிவோமாக.

கடைசியாக சகோதரரே! கடந்த இரண்டொரு மாதத்திற்குள்ளாக நமது சபையில் அநேகர், நம தாண்டவர் நியமித்த இந்தக்கிருபையின் எத்தனங்கள் மூலமாய், தங்கள் ஜீவிய பிரயாணத்தை முடித்து, கிறிஸ்துவுடனே பரதீசுக்குள் சென்று, இளைப்பாறுகிறார்கள் என்று அறிவோமே.

விசேஷமாய், போனவாரம் புதன்கிழமை அன்று, நமது சபையின் விசேஷித்த அவயவங்களில் ஒருவருப், யாவராலும் நன்கு மதிக்கப்பட்டவருமாகிய எலியா சாஸ்திரியார் வயதுசென்ற ப்ராக்கோபைப்போல, பூரண வ்யதுள்ளவராய், இவ்வுலகமாகிய, வனாந்தரத்தில் தமது பிரயாணத்தை முடித்து, அவருடன் கோசேன் என்னும பரதீசுக்குள் சென்றார் என்று கேட்டோமே. மோசேயைப்போல் அவர் கண் இருளடையவுமில்லை. அவருடைய பெலன் குறையவுமில்லை. இப்போது நமது ஆலயத்தில் அவருடைய ஆசனம் காலியாய் இருக்கிறதாகப் பார்க்கிறோம். அவரோடு கூட நாமும் பரம ராச்சியத்தில் பங்கு பெறும்

படி, அவர் காட்டிய நல் மாதிரியைப் பின்பற்று கர்த்தர் நம்மெல்லாருக்கும் கிருபை செய்வாராக

கிறிஸ்து மார்க்கத்தின் அஸ்திபாரமாகிய தாழ்மை என்னும் குணம் அவரிடத்தில் சிறந்து விளங்கினது. ஆவியின் கனிகளில் சிரேஷ்டமானதாகிய அன்பு என்னும் தர்ம சிந்தை அவரிடத்தில் இலங்கிப் பிரகாசித்தது. ஆவியின் கனிகளில் இரண்டாவதாகிய சந்தோஷமென்னும் இலட்சணம் அவரிடத்தில் காணப்பட்ட முகமலர்ச்சியினாலும், புன்னகைப்பினாலும், பூரணமாய் விளங்கி, கபடற்ற உத்தம இஸ்ரவேலனென்று சாட்சி பகர்ந்தது.

தேவாலய ஆராதனைக்கு வருகிற விஷயத்திலும் அவர் நமக்கு நல்ல மாதிரி வைத்துப்போயிருக்கிறார். காலையிலும், மாலையிலும், அரைமணிநேரம், சில வேளை ஒருமணிநேரம், பாட்டுப்பாடி, வேதம் வாசித்து, பிரசங்கம் செய்து, குடும்ப ஜெபம் செய்துவந்த அவர், தெவ்வாலய ஆராதனையை அசட்டைபண்ணினாரோ? இல்லை. ஞாயிற்றுக்கிழமை சாயங்கால ஆராதனையில், வாலிபருடைய இடம் காலியாயிருக்கிறதுண்டு. நடுப்பிராயமுள்ள புருஷர் ஸ்திரீகளுடைய இடம் காலியாயிருக்கிறதுண்டு. 75 வயதுள்ள அவருடைய இடமோ ஒருக்காலும் காலியாய் இருந்ததில்லை. சிலவேளை இங்கிலீஷ் ஆராதனைக்கும் வந்து போயிருந்தார். வெள்ளிக்கிழமை மாலை ஆராதனைக்கு

அநேகர் வருகிறதில்லை. இது மிகவும் துக்கப்படத் தக்க விஷயம். அவரோ தவறினதில்லை. கடுமை யான மழையும், அவரை தடுத்ததில்லை. பரிசுத்த வான்களின் திருநாட்களில், ஒன்பது மணி காலை ஆரா தனையில் ஒருவரும் வராவிட்டாலும், அவரைக் காண லாம். பாடுபட்ட வாரத்தில் தாமாய்ப்பாடி, கால் மைல் தூரம் கேட்கத்தக்கதாக தாமாய்க் கத்தி சதுர் பிரசங்கம் பண்ணி, இரா முழுவதும் தூக்கமற்றிருந் தாலும், அடுத்தநாள் வீதிவிவாதத்தை அசட்டை பண் ணினாரோ? இல்லை. எல்லா ஆராதனையிலும், அவ ரைப்பார்க்கலாம். தேவாலயத்தில் மனுஷ பெல வீனம் வெளிப்படுவதாயில் அவரிடத்தில் காணப்பட்ட போதிலும், மற்றவர்களுக்கு இடறலாய் இராதபடிக்கு இந்த தமது கடமையை ஒழுங்காய் செய்துவந்தார்.

இது மாத்திரமோ? இவ்வளவு ஆராதனைக்கும் வந்த அவர், அதன் பின்னுகிலும், இளைப்பாறினாரோ? இல்லை. பகலோ, இரவோ, மழையோ, பனியோ; வெய்யிலோ, குளிரோ; என்றும் பாராமல் வீடு வீடாய்ப் போய் வியாதிக்காரரைச் சந்தித்து, ஜெபம் பண்ணி வந்தார். இவ்விதமாய் கிறிஸ்தவர்களுக்காக கவலைப்பட்ட அவர், புறமதஸ்தரை அசட்டை பண் ணினாரோ? இல்லை. அவர்களுக்காகவும் உழைத்தார். சாயங்கால வேளையில், ஒண்டியாய் கையில் Tracts, Hand bills முதலியவைகளை எடுத்துக்கொண்டு, அஞ்ஞானிகளுடைய பரிகாசத்திற்கும், நகைப்புக்கும

அஞ்சாமல், கிறிஸ்து மார்க்க சத்தியத்தைப் போதித்து வந்தார்.

இன்னொரு விசேஷம், அவரிலும், அவருக்கு முன்னிருந்த அவருடைய சகோதரரிடத்திலும் காணப்பட்டது. இந்த விஷயத்திலும் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய போதனை உண்டு.

வேதாகமாக சாஸ்திரியாருடைய பிள்ளைகளை யாருக்கு ஒப்பிடுவோம? எரேமியா தீர்க்கதரிசனம் 35-ம் அதிகாரத்தில் சொல்லிய ரெகாபியருடைய குடும்பத்திற்கு ஒப்பாயிருக்கிறார்கள். எப்படியென்று பார்ப்போம்.

கர்த்தருடைய கட்டளையின்படி எரேமியா தீர்க்கதரிசி, ரெகாபியரின் வீட்டுக்குப்போய், அவர்கள் குடும்பத்தாரெல்லாரையும், தேவாலயத்தின் அறைகளின் ஒன்றிலே அழைத்து வந்து, திராட்சரசத்தினால் நிரப்பப்பட்ட குடங்களையும், கிண்ணங்களையும் அவர்களுக்கு முன்னே வைத்து, அவர்களை நோக்கி திராட்சரசம் குடிக்கிறதில்லை, ஏனெனில் ரெகாபின் குமாரனாகிய எங்களுடைய தகப்பன் யோனதாப், நீங்கள் பரதேசிகளாய் தங்கும் தேசத்தில் நீடித்திருக்கும்படிக்கு, நீங்களும், உங்கள் பிள்ளைகளும், என்றென்றைக்கும் திராட்சரசம் குடிக்கக்கூடாதென்று எங்களுக்குக் கட்டளையிட்டார். அப்படியே எங்களுடைய எல்லா நாட்களிலும், நாங்களும் எங்கள் ஸ்திரீகளும்,

எங்கள் குமாரரும், எங்கள் குமாரத்திகளும் திராட்சரசம் குடியாமல், எங்கள் தகப்பனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வருகிறோம் என்றார்கள்.

அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை மறுபடியும் எரேமியாவுக்கு உண்டாகி, அவர் சொன்னதாவது; ரெகாபின் குமாரர் தங்கள் தகப்பனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகிறார்கள். என் சனமாகிய எருசலேம் சபையாரோ, நான் பேசியும் கேளாமலும், என் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமலும் போனார்களே, ஆகவே நான் அவர்கள் பேரில் தீங்குவரப்பண்ணுவேன் என்கிறார்.

ஆம்: தஞ்சாவூர் சபையில் சிலராகிய நம்மைப் பார்த்தும், நமது தேவன் இவ்விதமாய் முறையிடமாட்டாரோ? வேதாகமாக சாஸ்திரியாருடைய பிள்ளைகள் தங்கள் தகப்பனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, தர்ம விஷயம், குடும்ப ஆராதனை, சதர் பிரசங்கம் முதலியவைகளைத் தவறாமலும், ஒழுங்காயும் செய்து வருகிறார்கள். அப்படியிருக்க நீங்களோ, உங்கள் இரட்சகரும், மீட்பருமாகிய நானும், என் மணவாட்டியாகிய திருச்சபைக்கு கொடுத்த கட்டளையை மீறினீர்கள். உங்கள் சுயபுத்தியின்மேல் சார்ந்து, நான் அனுப்பிய கிருபையின் எத்தனங்களாகிய வண்டியில் ஏறும்மும், நான் வழிக்கு அனுப்பிய ஞான ஆகாரத்தைப் புசியாமலும், இருப்பதினால் என் கட்டளைக்கு

சிலர் கிழ்ப்படியவில்லையே? ஆகவே, இவர்கள் என் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பதில்லையென்று தன் டனே விதிக்காதபடிக்கு தேவாலயி ஆராதனைக்கு ஒழுங்காய் வந்து, திருச்சபை நியமங்களை ஒழுங்காய் ஆசரிப்போமாக.

தஞ்சை கூர்கேட கவிராயர்

மகாகனம் வேதநாயக சாஸ்திரியார் அவர்கள்

கடை குமாரர்

கனம் எலியா தேவசிகாமணி சாஸ்திரியார் அவர்கள்

சுருக்க ஜீவிய சரித்திரம்.

குமாரன்

கனம் எலியா வேதநாயகம் ஐயாவர்களால்

எழுதப்பட்டது.

His birth.

சங்: வேதநாயக சாஸ்திரியாரவர்களின் ஐந்தாம் குமாரராகிய கனம் எலியா தேவசிகாமணி சாஸ்திரியார் 1834-ம் வருஷம் நவம்பர்மீ 26உ ஜெனனமானார். அவரது மாதா வரோக தயத்தம்மாள். இளம்பிராயத்திலிவர் தன் தகப்பனாரோடும், தன் தமையனார் ஞானசிகாமணி சாஸ்திரியாரோடும் மைசூர் திருநெல்வேலி, தூத்துக்குடி முதலிய பல இடங்களுக்குப்போனார். இதினால் தன் மூத்த சகோதரி கனம் ஞானதீப சாஸ்திரியம்மாவோடு யாழ்ப்பாணம் முதலிய தூரதேசங்களுக்கு தன் பிள்ளைகளோடு கடலகடந்து போய் தன் இரட்சணை மூர்த்தியாகிய இயேசுகிறிஸ்துவைப்பாடிப் பிரசங்கிக்க வேண்டுமென்கிற அவாமிருந்திருந்தது என்பது திண்ணம்.

சிறு பிராயத்திலேயே பாட்டு வரம் பெற்றிருந்த அவர் அவ்வரத்தை அமலனருளால் அனுபவிடானித்து பல பாடல்களைப் பாடலாயினர். அவையாவன:— சீவனேசுக்கிருபாசனு, குறவஞ்சியின் பின்பாகம், வண்ணசமுத்திரத் தெரிடர்ச்சி, அபோஸ்தலர் நடபடி புராணம், தெசுணைத்து நொண்டி, யோனா சரித்திர முதலியவை. இன்னுமனேக சிர்த்தனைகள், கிறிஸ்துவின் மரணத்தின் பேரில மரண ஒப்பாரி.

In early age he composed songs.

இவர் கட்டிய கவிகளின் அருமையை அறிந்த கனம் சாஸ்திரியாரோ அவைகளைத் தன் பாடல்களோடு சேர்க்குமாறு ஆக்கியாபித்ததுமன்றி தனக்குப்பின் தன் ஊழியம் அவருக்கே கிடைக்குமென்றும் எண்ணலாயினர் அப்படியிருந்தும் தன் தகப்பனார் பாடல்கள் பாடப்படாமல் குறைந்தும் தன் பாடல்கள் மிகுந்து எல்லாராலும் பாடப்படவேண்டுமென்கிற எண்ணங்கொள்ளாமல், தன் தகப்பனாரைக் கனப்படுத்தி அவரது பாடல்களை விர்த்திசெய்ய வேண்டுமென்பதே அவரது நோக்கம் அதைத்தமது ஆங்கிய காலத்தில் அவர் பாடல்களைப் பிரசுரஞ் செய்யவேண்டுமென்று செய்த ஏற்பாடுகளினால் நன்கு விளக்கியிருக்கிறார். புது ராகங்கள் கிடைக்குமாயின் அதைக் கொண்டு அவர் பாடிய பாடல்களை திருவிளா காலங்களாகிய கிறிஸ்து பிறப்பின் பண்டிகை, வருஷப் பிறப்பின் பண்டிகையன்று கோவிலுக்குப் போகும் சமயத்

தில் பாடிச் செல்லவேண்டுமென்கிற கருத்தாய்பிள்ளை களுக்குக் கற்றுக்கொடுத்து தயார் செய்வார்.

மரியவரத்தில் உபதேசியார் வேலை பார்த்துக்கொண் டிருந்த கனம் சவரிமுத்து பிள்ளை அவர்க

Marriage. ளின் சிரேஷ்டமகள் அதிபாக்கியத்தம் மாளை, கனம் மாசில்லாமணிப்பிள்ளையவர்க ளின் பேருதவியைக்கொண்டு 1863-ம் வருஷம் மணம் புரியலானார். 1864-ம் வருஷம் திருநெல்வேலியில் மூத்தமகள் சிரஞ்சீவி, வேதமணியம்மாள் பிறந்தசேதி அவரது தகப்பனார் அறியுமுன் தேகவியோகமானார். கடிதம் கண்டவர் தமையனார் கனம் ஞானதிக்க சாஸ் திரியாருக்கு இருக்கும் பெண்கள் பத்தாதென்று இவ ருக்கும் பெண் பிறந்தது என் றுசலித்துக்கொண்டு நல் லவேளை இச்சமயம் கேட்டுமுன் பெரிய சாஸ்திரியா ரும் ஜீவித்துப்போனார் என்றார். பிறகு

Children. வேதநாயகம்; தாயம்மாள்வரோதயம்; எஸ்தர்; வேதபோதகம்; வேததாஸ்; ஞானேந்திரம்; மனோன்மணி; ஞானமணி; நகாமி ஞான தீபம் என்ற 4 ஆண்களும் 6 பெண்களும் பிறந்தார் கள். இவர்களில் சிரஞ்சீவி வேததாஸ்

Family catastrophe சென்னையில் டிராயிங் படிக்கப்போன இடத்தில் சுரமும் இருமலுங்கண்டு திரும் பித் தஞ்சைக்கு வந்து பக்குவபரிகாரங்கள் வெகுவா ய்ச்செய்தும் சுகத்துக்கு வரவில்லை, பரமராஜா தமது ராட்சியத்தில் சேர்த்துக்கொள்ள சித்தமானார். கன்ம

ஞானப்பிரகாச ஐயர் அடிக்கடி வந்து துக்கப்படுவோரை ஆற்றித் தேற்றிப் போவதுடன் கனம், எலியா சாஸ்திரியாரும் தேவனடித்தார் அடிக்கத அவரதுகரத்தை மூத்திசெய்யவேண்டுமென்று துக்கத்தை பொருமையாய் சகித்து தன்னையும் மற்றவர்களையும் ஆறுதல் படுத்துவார்.

தன் மகள் சிரஞ்சீவி எஸ்தரமமாளை விவாகத்திற்காக கேட்டபோது பணம், படிப்பு, உயர்ந்த உத்தியோகம் பாராமல், ஈ-ஸ்ரீ லாசரு பிள்ளை தேவ ஊழியம் செய்கிறவரென்று கேள்விப்பட்டு அதுபோதுமென்று அவருக்கே மணமுடித்துக் கொடுத்தார். அவருக்குப்பிறந்த 2 பிள்ளைகளும் தவறிப்போனதினால் சித்தபிரமைகொண்டிருந்தபோது வெகு கரிசனையோடும், ஜெபத்தோடுமவரை பரிசனித்தார். கடவுளுடைய கிருபையாலவரும் சுகமடைய, பெண்ணும் பிள்ளையுமாய் திருநெல்வேலி சேர்ந்து வேலைபார்க்க புறப்பட்டார்கள். அவ்விடம் சேர்ந்தவுடனே சிரஞ்சீவி எஸ்தரம்மாளின் விசாரம் அதிகரித்து அனேக நாள் பசியும் பட்டினியுமாயிருந்து, வியாதியும் படுக்கையுமாய் தஞ்சைக்குக் கொண்டுவரப்பட்டு 3 மாசத்திற்குமேல் பலவித சிகிச்சைகள் செய்யப்பட்டும் சுகம் காணுதபோதும் நம்பிக்கையில் இளக்கரியாமலிருந்தார். ஒரு பெரிய மனுஷன் வீட்டிலே கலியாணமாயிருந்தபடியால் பெலவீனமான தன் தமையனாரை வீட்டில் வைத்து தானும் பிள்ளைகளும் பாடி வாழ்த்த

கலியாணவீடு சென்றூர். ஊர்கோலத்தில் போனவரைக் கூப்பிட்டு ஆசிபிரியும தருணம் என்று சொல்லவந்துபார்த்து, நீ போ, நான் சிக்கிரம் வருகிறேன் என்று தைரியம் சொல்லி சந்தோஷப்படுகிறவர்கள் சந்தோஷம் குறையாது ஊர்கோலத்துடன் சென்றூர். அரைநேரம் பின்னே கர்த்தரிடம் சேர்ந்தது. இவர் விசுவாசம் பெரியதே.

His daily work.

ஒரு உண்மையுள்ள வேலையாள் தன் எசமானுக்கு திருப்தியுண்டாக இருட்டோடே எழுந்து நேரப்பட வேலைசெய்து வருத்தத்தின் அப்பத்தைப் புசித்து வெயிலினுஷ்ணத்தைச் சகித்து கரிசனையாய்ப் பாடு படுவானே அவ்வாறே தன் பரம எசமானின் வேலையின் உத்திரவாதத்தை உணர்ந்தவராய் தான் உண்மையுள்ள உக்கிராணக்காரனைக் கண்டு பிடிக்கப்படும்படி அதிகாலையிலெழுந்து காலைக்கடன்செலுத்தி தன்னை சுத்திகரித்துக்கொண்டு தேவனைக்குருவிகள் கூவித் துதிக்க ஆனந்தித்து தானும் தன் சிருட்டிகரைத் தொழ ஏவப்பட்டதாய் எண்ணி பல கீர்த்தனைகளை தேவாரமுதலியதைச் சொல்லி தனித் தியானம் பண்ணின பிறகு தனது புத்திரர் பவுத்திரர்களை எழுப்பி தன்னோடு அசைந்து இசைந்துபோற்ற உசாவி எழுப்புவார். பலபாடல்கள் பாடியபின் பிரார்த்தனை பாடி, சத்தியவேதத்தில் ஒரு பாகம், தேதிவாக்கியம், ஞானுபதணப்பெட்டி வாசித்து விஸ்தரித்தபின் ஜெபித்து ஒரு கீர்த்தனை

முழங்காலிலிருந்தவண்ணம் பாடி, தேவாரத்தோடு லெகு உற்சாகத்தோடும நம்பிக்கையோடும முடித்து எழுந்திருப்பார். கர்த்தருடைய ஜெபத்தை உரத்திச் சொல்லாமல் மேலெழுச்சியாய்ச் சொன்னவரைக் கவனித்தால், கண்டித்து உரத்துச் சொல்லவேண்டும், அச்சிறு ஜெபத்தையாவது கவனித்தும் முழங்காலுன்றியும் உண்மையாய்ச் சொல்லக்கூடாதாவென்றெச்சரிப்பார். காலைப் பாசனம் அருந்தியபின், ஒற்றைத் தாள் பிரித்தி, ஜெபமாலை புஸ்தகம், சங்கீதம் கையிற்கொண்டு வியாதிக்காரரிருக்கும வீடுதேடிச் சென்று ஒரு சங்கீதம் வாசித்து, ஜெபமாலையில் சில கவிகள் பாடி அவர்களுக்கு ஆறுதலாக பராபரனுடைய வசனத்தைக்கொண்டு புத்திபுகட்டி தனக்குத் தெரிந்த வரையில் பக்குவ பரிகாரங்கள் சொல்லி வருவார், கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமன்று, புறமதஸ்தருக்கும் சர்வலோக இரட்சணமூர்த்தியை தெரிவிப்பது தமது கடமையென்ற கருத்துகொண்டவராய் பகலின் உஷ்ணத்தையும் சட்டை பண்ணுது ரெயில் வேஸ்டேஷன், ஆஸ்பத்திரி, சிவில் கோர்ட்டு முதலிய இடங்களுக்கும், பாண்டித்தியமடைந்த இந்தக்கனிடத்திலும் சென்று ஒற்றைத்தாள் பிரித்தி கொடுத்து கேட்ட கேள்விகளுக்கு உத்தரவளித்தும், ஆட்சேபணைகளுக்கு சமாதானம் கூறியும் இயேசுகிறிஸ்துவே உலக இரட்சகர் என்று தெளிவாய் ரூபிப்பார். சில பிரிதிகளைக் கிழித்து தெருவில் எறிந்தும் அதைஎடுப்

படாமல், இதே நேரத்தில் வண்டிக்கணக்கான பிரிதிகள் அச்சிடப்படுகின்றன. கிழிப்பதினால் ஏங்களுக்காவது. கிறிஸ்து மார்க்கத்துக்காவது நஷ்டமில்லை. உன் ஆத்துமரட்சிப்பை அசட்டை செய்கிறாயே உன் தப்பிதத்தை உணர்ந்து நீ நிந்திக்கிற கிறிஸ்துவையுண்டு, தேவனுனக்கு நல்லபுத்தி கொடுக்கவேண்டுமென்று உருக்கமாய் எச்சரிப்பார். சபையிலே ஒருவர் வியாதியாயிருந்தபோது வழக்கமுறைய 3 மாதமாகவிலும், மாலையிலும், தவறாமலும் சில சமையங்களில் மத்தியானத்திலும் தமது குமாரரோடுபோய், பிடிலோடு கீர்த்தனை, ஞானப்பாட்டு பாடி, சங்கீதம், தேகிவாக்கியம் வாசித்து ஜெபுதல் படுத்துவார். ஒருவர் அவரைப் பார்த்து ஏன் ஐயா, இத்தனை பாடு படுகிறீர் வயசானவர் தானே, தேவசித்தப்படி நடக்கட்டுமே யென்று சொன்னபோது, அப்படியல்ல, அதிக அருமையானவர், நமது பாடலை, ஊழியத்தை நேசிக்கிறவர்களிலிவரொருவர், அவருக்கு கிறுபைய னிருக்கிறதினே என்று அதிக அங்கலாய்ப்போடு பேசுவார். உறுக்கமாய் தேவனோடு போராடி, மேற் கொண்ட யாக்கோப்பு போல ஜெபித்தார். அவர் ஜெபத்தைக்கேட்ட இரக்கமுள்ள தேவன் அவருக்கு வரவர நற்சுகத்தைக் கொடுத்து இந்நாள் வரையிலும் அவரை நமது நடுவில் காப்பாற்றி வருகிறார். தமது பிள்ளைகளுக்கு ப்ரதபிக்கிறதுபோல சபையாரின் சுகதுக்கங்களை தனதாக்கிக்கொண்டு நடக்குமிவருக்கினை

யானவர் உலகின் கண் அநேகரிரார்ரென்பது திண்ணம். இரவில் ஐயா 9 மணியாகிறதே 2, 3, வீடு போய் செபித்து வந்தோமே இன்னொருநாளில் மறுவீடு போகலாமென்றால் அப்படியல்ல நாளை எப்படியோ நமக்காக காத்திருப்பாரே என்று அந்த வீடு புகுவார். உடனே அவ்வளவிலுள்ளோரும் ஒருவேளை படுத்திருந்தபோதிலும் திடுக்கிட்டெழுந்து நின்று தண்டஞ் செய்து மற்றவரையும் செபத்திற்கு ஒழுங்காய் உட்காரச்செய்து ஜெபிக்கக்கேட்பார் சலியாமல் முறை பிரகாரம் கீர்த்தனைமுதல் தேவாரம் வரைகில் பிடிலோடு ஜெபித்து சந்தோஷமாய் வீட்டிற்கு வருவார். பிறகு லேசான சாப்பாடு சாப்பிட்டு அச்சிடும் தமது பிதாவின் பிரபந்தங்களை பிழை திருத்தல் செய்து, பிடியற்காலை அச்சாபீசிற்கு அனுப்பவேண்டுமென்று ஏறக்குறைய 11 மணி வரையிலும் அலுவலாயிருப்பார். வீட்டுக்கு முகப்பிலிருக்கும் மகிழமரம் தன் பிதாவைத்து பயிராக்கின தினால் அதற்கும், தோட்டத்திலிருக்கும் மரங்களுக்கும் தானே தண்ணீர் மொண்டு ஊற்றுவார்.

இத்தனையாய் பாடுபட்டவருக்கு தீங்கு ஒன்றும் நேரிடாது என்றும், தேவசம்பரமமாய் வாழ்விப்பாரென்று எண்ணுவோமோ? இல்லை இல்லை. பொன்னைப் புடமிட புடமிட மாற்று அதிகரிக்கிறதுபோல், பராபரன் தமது தாசர்களை துன்பமாகிய புடத்திலிட்டு விசுவாசமாகிய மாற்று அதிகரிக்கச் செய்கின்

ரூர் என்பதை இந்த தாசர் விஷயத்தில் நன்கு விளங்குகிறது. முன்னமேயே 2 பிள்ளைகள் கர்த்தருடைய ராஜ்சியத்தில் சேர்ந்திருக்க, அவரது கடைசி குமாரத்தி தவசுகாலச் சதுர்பிரசங்கம் நடாத்தி வருங்காலத்தில் திடீரென விஷசுரத்தினால் பீடிக்கப்பட்டு 4 நாளாய் வருத்தப்பட்டு தஞ்சையில் வைத்திய சாஸ்திரத்தில் போதெற்ற வரும், நிறைந்தவர்களுக்கும், விசேஷமாய் சாஸ்திரியார் வீட்டாருக்கும் இனமாக வைத்தியம் செய்து வந்த கனம் Mullens அப்பாத்திக்ரி அவர்களை வரவழைத்துக் காண்பித்ததின்பேரில் அவர் இது Pneumonia (நியூமோனியா) காய்ச்சல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரவேண்டுமென்று வற்புறுத்தினதின் பேரில் அங்குபோக, Doctor பரிட்சை செய்து (மிகவும் பிந்தி வந்தீர்கள்) வியாதி முற்றிப்போயிற்று. இனி மேல் ஒன்றும் செய்யமுடியாது என்று சொன்னபோதிலும் பட்சமுள்ள அபபாத்திகிரி அவர்கள் காந்த ஊசியில் மருந்து வைத்து உடம்பிலேற்றி பிரயாசப்பட்டார். தேவன் சித்தமோ வேறுயிருந்தது. 1st April 1905 சனிபகல் 11 மணிக்கு அந்தப் பிள்ளையையும் தமது ராட்சியத்தில் சேர்த்துக் கொள்ள சித்தமானார். "மனிதன் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்தது." இதுபோலவே முன்கனம் வேதநாயக சாஸ்திரியார் நேசக்கடைசி புத்திரி சிரஞ்சீவி மனோன்மணியம்மாள் தன்

Family calamity.

புருஷன் M. மாசில்லாமணிப்பிள்ளையோடு நாகையில் முனுஷிபாரி வேலைபார்த்து திடீரென்று வைசூரியும் காய்ச்சலும் கண்டு தபசு காலத்தில் இறந்துபோனார்கள். அதினால் கனம் சாஸ்திரியார் ஆறுத்தியர முற்று சில தினங்களாய் சதுரை நிறுத்த சபைத் தலைவரும் மிசியோனேரி மாரும் அவரிடம் வந்து நீங்கள் எல்லாருக்கும் ஆறுதல் சொல்லுகிறவராயிற்றே நீர் இவ்வளவு விசனப்பட்டு சதுரை நிறுத்தலாமா? அடித்தவரிடத்திலல்லாமல் யாரிடத்தில் ஆறுதலடையலாம். அவர் பாடுகளல்லவோ நமக்கு ஆறுதல் அதேதியானத்தை நடத்தமென்க நடத்தினார்.

இந்தத் தக்கத்திலே கனம் எலியா சாஸ்திரியார் சோர்ந்துபோகாமல் தேவன் ஏனை நமதுமேல் பராமுகமாயிருக்கிறார். நமது பாவம் தண்டிக்கிறதென்று இப்படி தன்னோடு பிறரைத் தேற்றினார். மகன் கனம் வேதநாயகம் ஐயர் பிரசங்கமுறையானதினால், ஆத்துமப்பாடுகளைப்பற்றி உறுக்கமாய்ப்பேசினார் மரணமும் நம்மைக் கிறிஸ்துவினன்பைவிட்டு பிரிக்காதென்ற விசுவாசம் அணுபோக சாகுமியாய் தவறுமல் சதுர் பிரசங்கம் நடந்தேறினதால் தெரியவந்தது.

Charitable actions.

தன் பெரிய குடும்பத்தையே நடாத்த போர்ந்த வரும்படியில்லாத போதும் "They have learned the luxury of doing good" தர்மம் செய்வதாலான செல்வத்தை யறிந்தவராய் சிலருக்கு மாதாந்த சம்பளம் கொடுப்பதாய் ஆப்

பக்கரியை ஒழுங்குசெய்து வீட்டில் தினசரி அப்ப மளிக்கச்செய்தார். அன்னதுக்காக வரும் எளியோ ரைக்குறித்து வீட்டிலுள்ளார் நமக்கே கஷ்டமாயிருக் கிறதேயென பலவாறுக பேசினபோதிலும், நிலமை யில் ஏதாவது செய்யவேண்டுமென்று தானேபோய்ச் சருவச்சட்டியில் அன்னம் எடுத்துக்கொண்டு வந்து படைப்பார்.

தரித்திரமடைந்து சிறுமைப்பட்டுக் கொண்டிருந்த ஒரு பெண்பிள்ளைக்கு விசேஷித்த உதவிபுரிந்தது மன்றி விபாதியாயிருந்த போதும் வீடுதேடிப்போய் உபகாரஞ்செய்வார் அவளோ அவருக்கு நன்றியறித லாக என்னைப்பெற்ற தகப்பனல்லவோ என்று சொல் லி ஆத்ம சரீர நன்மைகளைப்பெற்று பரமராஜாவி னிடம் போய்ச் சேர்ந்தாள் வீட்டிலுள்ள யாவரும் சாப்பிட்டார்களாவென்று கவனிப்பார். தனக்கு அளிக் கப்பட்ட பட்சணங்களை பிள்ளைகள் சாப்பிட்டார்க ளாவென்று கவனித்து மகனுக்குக் கொடுப்பார்.

இவர் உதவி கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமோ? இல் லை. இல்லை. இந்தக்களுக்கும்படியே செய்துவந்தார் உதாரணமாக ஒரு இந்து வேலைக்காரன் பிரக்ஞை யற்று தன்வண்டிச்சாவடியில் படுக்கையாய்க் கிடந்த போது தானே கஞ்சிகொண்டுபோய்த் தலையை நிமிர்த் தி குடிக்க தயவாய்ச் சொல்லி சில தினம் அப்படியே செய்ய அவனுக்கு நல்ல சுகம் வரவே கொஞ்சம் காசு கொடுத்து உன் கிராமம் சென்று சுகப்பட்டு வாவெ

ன்று அனுப்பினர். மரணப்படுக்கையிலிருந்தவன் இன்னம் உயிரோடிருக்கிறான். நன்றியறிதலோடு அதை இன்னம் சொல்லுகிறான். தனக்கு மிஞ்சி தானதருமம் என்னும் பழமொழியை தனக்குள்ளதில் தான தருமம் என்று மாற்றின பக்தர்களிலிவரொருவர். தர்மம் தலை காக்கும் என்னும் முதுமொழியை சிரமேற்கொண்டிருந்தாற் போலும். இவைகளை ஒன்றொன்றாய் எடுத்துரைக்கப் பெருகுமாதலின் அவைகளை விரிக்காமலே விட்டோம்.

தேவனுடைய ராஜ்ஜியம் புசிப்பிலும் குடிப்பிலுமல்ல என்றதற்கிசைய பஞ்சமரில் ஒரு ஏழை மரிக்க, உதவியிலலாமல் புதைக்கத் தூக்கிச் செல்லும்போது தானே விளக்கு பிடித்துக்கொண்டு சென்று சேமிக்க உதவியாய் நின்றார். இதல்லோ அன்பு. தான்மேல் மகனென்றும், அந்தஸ்துள்ளவனென்றும் மேன்மை பாராட்டவில்லையே இது அல்லவோ கலப்பற்ற கிறிஸ்துவினன்பு.

ஓர் உத்தியோகஸ்தன் இருக்கும் மத்தியில் தனியாகக் குடியிருந்து பேதியில் மரித்தபோது மனைவியும் நிராதாரமான சிசுக்களுமாக தவித்துக்கொண்டிருந்தபோது தான் தன் பிள்ளைகளோடு இரவெல்லாம் விழித்திருந்து பாடி ஜெபித்து குளிப்பாட்டி பெட்டியில் அடக்கி, பாடிக்கல்லறை ஸ்தலத்திற்கு சமீபிக்க மறற இனத்தார் கூடினர். இது அல்லோ இனத்தி

லும் காணப்படாத சமயசகாயம் மரணத்திற்கும் கொள்ளை நோய்க்கும் அஞ்சா வீரம்.

His family love & rare attachment to each.

வீட்டிலுள்ள பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் பேரில் அதிக பாசமுடையவர். தன் பிள்ளைகள், அண்ணன் பிள்ளைகளென்றும், தன் பேரப் பிள்ளை அண்ணன் பேரப்பிள்ளையென்றும் பித்தியாசம் பண்ணுது அவர்களைத் தூக்கவோ, அமுதூட்டவோ, தூங்கவைக்கவோ, வெகு கவலையாயிருப்பார். வீட்டிலுள்ள அற்ப வேலையையும் செய்ய பின் வாங்கார். 73 வயதாய் விருத்தாப்பிய திசையிலிருந்தவர். அண்ணன் வார்த்தையைக் கைக்கொள்வதிலும், அண்ணனைக் கனம் பண்ணுவதிலும் முந்திக்கொள்வர். இவ்வாறு எல்லாராலும் நேசிக்கப்பட்ட அவருக்கு தன் பேரப்பிள்ளைகள் திடீர் திடீரென்று இறந்தது பெரும் துக்கமே. சாஸ்திரியார் றிஸ்துவை இருதயத்திலுடையவரான படியினாலே இத்துக்கங்களைச் சகிக்கக்கூடியவரானார் என்பது நிண்ணம். 10-வயதுள்ள செல்லையா மதுரைகிடாரிப்பட்டியில் தவறி கிணற்றில் விழுந்தும், Blake என்ற 3 வயதுள்ள பையன் மதுரையில் வைசூரியாலும் அதே வயதுள்ள Daniel என்ற பையன் கண்ணங்குடியில் விஷமருந்து குடித்தும், ராஜரெத்தினம் தரங்கையிலும், எலிசபேத் சுரத்தினால் திருச்சியிலும் பிறந்தபோது மனம் எத்தனையாய் பதைத்திருக்கும். தேவனோடு நாம் எதிர்போமோ.

வாயைக்கரத்தால் பொத்திக்கொள்வோம். நமது தேவஊழியம் பாட்டுப்பிரசங்கத்தைக் குறைப்போமோ அல்ல. அல்ல. அதிக ஊக்கத்தோடும், விழிப்போடும் செய்து மாசற்றவர் சென்ற இடம் சேருவோமென்று சிறிதும் தளர்ரீரதவராகக்காணப்படுவர்.

ஞாயமுடன் வேதநாயகன் பாட்டுக்கு
நன்மை தருவனடி நிசநிசம்
உண்மை தருவனடி நடுவிட
இன்னம் வருவனடி-ஏலேலம்டி etc.,

என்று பாடுவர். பொறுமையில் உங்கள் ஆத்மாவை காத்துக்கொள்ளுங்களென்பார்.

கிறிஸ்துவின் அன்பை இருதயத்திலுடையவராயும் அவர் மாதிரியைப் பின்பற்றிநடந்தவருமாகிய சாஸ்திரியார் பிறரால் நேசிக்கப்பட்டவராயும், நம்பிக்கையோடும், பொறுமையோடும் பிறருக்குப் பிரயோசனமாயும் தன் ஜீவனத்தை செய்துகொண்டிருக்கும் போதே உன்மைச் சொரூபியாகிய தேவன் தமது ஆதி ஆலோசனைய அவரிடத்திலும் செய்யவேண்டியவரானர்.

தன் தமையனர் மருமகப்பிள்ளை ஸ-ஸ்ரீ சேஷாத்திப் பிள்ளை வியாதியால் சென்னையில்கஷ்டப்படுகிறாரென்று கேள்விப்பட்டதும்தான் அவர்களுக்கு ஆங்காறு தலாய்ப் பாடி ஜெபிக்கவேண்டுமென்கிற கருத்தாய அவசரமாய் புறப்பட்டு பிள்ளைகள் பேதிகாலம் போக வேண்டாமென்று எச்சரித்தபோதிலும் கர்த்தர் எங்கு

மிருக்கிறார் என்று சொல்லிவிட்டுப்போனர். வீட்டி
லுள்ள யாவருக்கும் ஆனதலாயிருந்ததுமன்றி பல
சபைகளையும் பெரியார் சிறியார் யாவரையும் வீடுகளில்
கண்டு சந்தித்துப் பாடிஜெபித்துக்கொண்டு வருவது
வழக்கமாயிருந்தது. சென்னைக்குப்போன

Hi desire to publish his father's works, prompted, by Dr. pope's preface to Manicavasagam.

2 வாரதுக்குள் மா-ஸ்ரீ சேஷபகிப்பிள்ளை
தேகவியோகமானர் அவரடக்கத்துக்கு கல்
லுதவிசெய்து, பெண்சாதிபிள்ளைகளையும்
வழிவிட்டனுப்பிவிட்டு, தன் தகப்பனர் பிர
பந்தங்கள் அச்சிடப்பட ஏதாவது ஒரு ஏற்
பாடு கல்விமான்களும், செல்வவான்களும் நிறைந்துள்
ள சென்னையிலேயே செய்யலாமென எண்ணி இன
னம் சில தினங்கள் தங்கி தஞ்சை போகலாமென்று
இருந்தார். Dr Pope மாணிக்கவாசகத்தின் மூக
வுரையில் சுதேச கிறிஸ்தவர்களில் திறமையான கவி
ராயர் கனம் வேதநாயக சாஸ்திரியாரைத்தவிர வேறே
கிடையாது. அவர் காவியங்கள் அழியாவண்ணம்
சங்கத்தார் அவற்றை அச்சிடுவாராயின், அது தமிழ்
பாஷைக்கே பெரும் பொக்கிஷம்போலாம் என்று எழு
தியிருப்பதைக் கனம் பிளேக்கையர் சாட்ட அதைத்
தன்ஜீவிய காலத்திலே செய்து தீர்க்கவேண்டுமென்கிற
அவா மேலிட்டதினாலே சென்னையில் தங்கி, அனேக
பெரியமனுஷரைக்கண்டு பேசி பணம் கடனுகைக் கொ
டுங்கள், or புஸ்தகப் பங்காகிலும் எடுத்துக்கொள்
ளுங்கள் ($\frac{1}{8}$ பாகம்) என்று சொல்ல அப்படிச்செய்ய

வரைக்காணுது, சப்ஸ்கிரிப்ஷன் மூலமாய்ப்பணம் தண்டல் செய்யலாமென்று எண்ணினார் போலும். இப்படியாக உலகத்துக்கே ஒரு பெரிக்கிஷம் சம்பாதிக்க அதிகக்கலியாயிருக்கும் சமையத்தில் தேவாதி தேவனுடைய சித்தம் வேறுயிருந்தது. மனிதன் ஒன்று நினைக்க தெய்வமொன்று நினைத்தது என்பதற்கு இசைய தமது தாசராகிய சாஸ்திரியாரை தன் ஜனன தேசத்தைவிட்டு தனிய யழைத்துப் போய் தம்மிடமே வரவழைத்துக் கொண்ட ஞானத்தையும் தேவசித்தத்தையும் யார் அறிவார். அழைத்தவரே யன்று வேறுருவருமறியார்.

Names of Books printed by Him.

கனம் வேதநாயக சாஸ்திரியாரவர்கள் செய்த பிரபந்தங்களில் சிலவற்றைத் தமது அரும் பிராயத்தானும், பலருடைய நன்கொடையினாலும், தன மகன் சிரஞ்: ஞானேந்திரம் பிள்ளை நற்றுணையினாலும் அச்சிட்டுவெளிப் படுத்தினார். அந்த புஸ்தகங்களின் பெயர்.

N. B.—இன்னம் அநேக நூல்களை கையெழுத்துப்பிரதியாக எழுதி அச்சில் கொடுப்பதற்காக தயாராக வைத்திருக்கிறார்கள் :—

1. ஆதியானந்தம்
2. அறிவானந்தம்
3. வஸ்துநிருணயம்
4. சைதன்னியத்திறவுகோல்
5. வேதப்பழமொழி

} in one Volume.

6. காலவித்தியாசமாலே } in one Volume.
7. பெண்டிர்விடுதூது }
8. பட்டணப்பிரவேசம் } in one Volume.
9. தெட்சணகொண்டி }
10. பரமநீதிப் புராணம்
11. ஞானத்தச்சனுடகமி
12. ஜெபமாலே Third Edition.
13. ஞானக்குயிலி } in one Volume
14. லியாணவாழ்த்துதல் } Second Edition.

மேற்புஸ்தகங்கள் வேண்டுவோர் E. Gnanandram Pillai The Evangelical Hall, Tanjore என்று எழுதினிலேக்குப் பெற்றுக்கொள்ளலாம். மற்ற புஸ்தகங்கள் கூடியசீக்கிரம் அச்சடித்து வெளியாகும்.

தகப்பனருடைய புஸ்தகங்கள் அச்சிடப்பட வேண்டுமென்கிற அவாவின் மேலீட்டினாலே தன் புத்திரரில் இருவராகிய மீவதபோதகம்பிள்ளையையும், ஞானேந்திரம்பிள்ளையையும் அதிகாரப்பத்திரமளித்து திருச்சி, மதுரை, தூத்துக்குடி, பாளையங்கோட்டை, தென்காசி முதலிய இடங்களிலுள்ள கனவான்களிடம் Subscription வாங்கிவர அனுப்ப அங்கங்குள்ளவர்களும் அவர்களுத்தக்கமரியாதையுடன் உபசரித்து தகுந்த உதவியும் புரிந்து அனுப்பினார்கள். அவர்கள் செய்த உதவியினாலே மேற்சொன்ன புஸ்தகங்களில் சிலவற்றை அச்சடித்தார்.

His Death.

சென்னைக்குப் போனவிடத்தும் இதே நோக்கத்தினாலே சில நாட்தங்கினாரென்று முன்னே சொன்னோம். அப்போது அவருக்கு 2 நாளாய் வயிற்றுப் போக்காயிருந்தும் யாருக்கும்

சொல்லாமலிருந்து 1908 September 8ம்வ இரவு, தனக்கு கடின போசனம்வேண்டாமென்று சொல்லி நீர் ஆகாரம் அருந்தி படுக்கைக்குபோனார் இரவு 10-மணிக்கெல்லாம் வயிற்றுவலி அதிகமானதனால் டாசர்மகன் என்ன தாத்தாசெய்கிறதுன்ன எனக்கு 2நாளாய் வயிற்றோட்டமாயிருந்தது, மருந்து சாப்பிட்டேன வயிறுநோகிற தென்றுசொல்ல உடனே அவர் சினேகிதரை வரவழைத்து போர்ந்த ஒத்தணங்கள், மருந்துகள் முதலிய பக்குவங்கள் செய்தும் ஒன்றும் சரிப்படவில்லை. விடியற்காலம் டாக்டர் வந்து பார்த்து மிஞ்சிப்போனது என்று சொலலி தைலம் தேய்க்க உத்தரவுபண்ணினார். தைலம் தேய்க்கவே விழிபுண்டாகி ஞானபரணப்பெட்டியை வாசிக்கச்சொன்னார் வாசித்ததுவிளங்காததினால் தானே பதைவாங்கி மார்பில்வைத்துபார்த்துக்கொண்டிருக்கும் திருணத்திலேயே பரமராஜாவினிடம் போனார். என்ன ஆறுதலான மரணம், எவ்வளவு நம்பிக்கையானபோர்வீரன் எவ்வளவு இன்பமான இளைப்பாறுதல் தமது தாசர்களுக்கு அளிக்கிறார் என்று இந்த பக்தரின் மரணத்தினால் நமக்கு ஒன்று விளங்குகிறது. அங்குள்ள சபையாரும் சினேகிதரும் அவருடைய பிரிவுக்காக அங்கலாய்த்து தஞ்சையிலுள்ளோருக்கு தந்தியனுப்பவே, இங்குள்ளவர்கள் அடிவயிற்றில் இடி விழுந்ததுபோல தாங்கள் நினையாத வண்ணம் காரியம் நடந்ததே என்று இனந்தாரும், சபையாரும் கூடி அங்கலாயத்து அழுது

புலம்பி தவித்து, வயதுசென்ற மணவியும் குமாரர் வேதநாயசம்பிள்ளையும் ஞானேந்திரம் பிள்ளையும் உடனே ரெயில் வரை முகத்தையாவதுபார்த்து ஆறு தலடையலாமென்கிற நோக்கமாய் நேரேரெயில்வந்து வண்டியேறி சென்னைக்குப்போய் அவரை 1908ஸ்ரு செப்டம்பர்மீ 10-ம் தேதி பகல் 8 மணி திட்டத்தில், C. M. S. உத்தான பூமியில் சகல கிறிஸ்தவர்கள், மருமகன் கனம் G. சாமுவேல் ஐயர் முதலியவர்கள் உதவியினால், நல்லடக்கம் செய்து உடனே தஞ்சைக்கு பிரயாணமானார்கள் தங்களருமைத் தகப்பனையிழந்த பிள்ளைகளுக்கும் புருஷனையிழந்த மனைவிக்கும் எவ்வளவு விசனம் இருக்குமென்று நாம் சொல்லவேண்டிய தில்லை தக்கப்படும் எல்லோருக்கும் கர்த்தர்தாமே நல்லாறுதல் அளிப்பாராக "கர்த்தாவின் சித்தம் நல்லதே அதின்படி ஆகட்டும் & c."

சென்னைக்கு அடக்கத்திற்குப்போனவர்கள் திரும்பிவரவே, தஞ்சை சபையார் யாவரும் துக்கம் மினவினர்கள் துக்க செபத்தினன்று வெளியூர்களிலிருந்து இனபந்துக்களும் வந்து கூடினர் அவர்களில் தரங்கைசங் N.Samuel ஐயர்ஒருவர். அவரன்று காலையில் துக்கித்திருந்த பந்துக்களுக்கு ஆறுதலாகஜெபித்ததுமன்றி இரவுவைத்திருந்த ஜெபக் கூட்டத்தில் சங்கீதம் 116; 15-ம் வசனமாகிய "பரிசுத்தவான்களின் மரணம் கர்த்தரின் பார்வைக்கு அருமையா

னது" என்ற வேதவாக்கியத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு.

(a) உலகத்தார் மரணத்தைக் கொடுமையான தாகவும்.

(b) விசுவாசிகளோ அதைக்கூர் ஒடிந்ததாகவும்

(c) தேவனே அதை அருமையான தாகவும் பார்க்கிறார்களென்று வந்திருந்த திரள்சனம் இருசபையோருக்கும் வெகு ஊக்கமாகவும் ஆறுதலாகவும்பேசி அமர்ந்தனர். Mr. G. Pitchamuthu B. A., L. T., HeadMaster. அவர்கள் தான் சிறுவயது முதல் கனம் சாஸ்திரியாரிடம் கண்டபட்சம, தயாளம், பொறுமை முதலிய நற்குணங்களையும், துக்கவீடுகளில் பிணத்தண்டையார் இல்லாமல்போனலும் இவர்சமீபத்திலுட்கார்ந்து இரவு முழுவதும் தேவனுடைய வசனத்தை வாசித்து பாடிக்கொண்டிருந்ததுநமக்கு எவ்வளவு ஆறுதலாயிருந்தது என்றுரைத்தார். சங். D. David ஐயர் கனம்சாஸ்திரியாரின் ஆசனம் வெறுமை யாயினும், அவர்சத்தத்தைக்கேட்காவிடினும் உலக பிரகாரம் நாம் துக்கித்தாலும், நாம் பின்பற்றும்படியாக அவர்தமது ஜீவியகாலத்தில் காட்டிய பல நற்குணங்களாலே அவர் மரித்தும் பேசுகிறாரென்று சொல்லத்துணிவோம் என்று மொழிந்தார். தஞ்சை சபையர் சாஸ்திரியாரையும் அவர் வீட்டாரையும் எவ்வளவாய் சினேகிக்கிறார்கள். Rev. W.H. Blake S.P.G. Missionary, Tanjore, and

M.R.Ry. A. David Pillay Retired Munsiff இவர் களுடைய முயற்சியினால் பணம் சேகரிக்கப்பட்டு கனம் சாஸ்திரியாரின் அடக்கம் துக்கசெலவு முதலி யதுகளுக்கு கொடுத்து தங்களுக்கு அவர் மேலி ருந்த பட்சத்தை பரிபூரணமாய்க்காட்டினார்கள் இத ற்காக நாங்கள் எல்லோரும் மிகவும் நன்றி யறிந்திருக் கிறோம் கனம் வேதநாயக சாஸ்திரியார் இறந்தபோது கையிலிருந்தது 6 பைசா சபையார் அவரது அடக் கத்துக்கு செய்த செலவோ நூற்றுக்கதிகமானது. அவர்களுக்குள்ளிருந்த அன்பும் வைராக்கியமும். அவர்கள் பிள்ளைகளுக்குள்ளும் இருப்பது எவ்வளவு மேலானது "தேவன் உபகாரிகளை ஆசீர்வதித்து தமது நாமத்தினிமித்தம் ஸ்ரீ கலயம் குளிர்ந்த ஜலம் கொடு த்தவருக்கும் பலனளிக்கும் கிறிஸ்து தமது ஊழியத் தை கனம் பண்ணுபவரை தாமே பிதாவின் முன்பாக வும், பரிசுத்த தூதர் முன்பாகவும் கனம்பண்ணுவார்".

முற்றிற்று.

குமாரன்

கந்தும் எலியாவேதநாயகம் ஐயரவர்களால்

பாடப்பட்டது.

கழிநேடில்.

1. எங்களஞ் சென்னில் ஏழையை விடுத்தாய்
இரங்கியே தனிக்கவே திரந்தாய்
ஏசுவைப்பணிந்தாய் இடையருத்திடர்ந்தாய்
ஏகவோ பட்டணம் சென்றாய்
பரிதபித்தனையே வழிவிடாதடுக்க
பாரமா மென்றல்லோ விடுத்தாய்
பட்சமோமேந்த லெட்சம்போர்கூட
பாடனத் தடுக்கெனப் பறந்தாய்
சென்னையிற்சென்றாய் சிலுவையைச்சுமந்தாய்
தேவனே தனையெனப்பகர்ந்தாய்
சிறுமையிற் துதித்தாய் பெருமையற்றிருந்தாய்
தேவகையாழுகைக் கமைந்தாய்
மனமதுகனிந்தாய் தினமது புகழ்ந்தாய்
மாசிலா ஏசுவைப்பணிந்தாய்
மேகமேறினையோ மகிமை சூடினையோ
முனிஎலியா ஒத்தாயே.

2. ஆயிரத்தொளாயிர சமைஎட்டு
ஆனசெப்டம்பர் ஒன்பதில்
அருகில் நிற்பாரும் தடையெனவெளியில்
அனுப்பிய நேரஞ்சென்றனையோ
முறைமையாம் மனிஎமக்கள் தடையெனவே

மறு இடம் ஆகுமெனச்சென்றாய்
மகத்துவன் காதல் ஸ்ரீருத்துமேதனியாய்
மனஞ்சலியாது தியானித்தாய்
மீதியாம் அறுவர் மக்களோ இருத்தி
மிகஷ்டரைவாய்ப் பரீடைந்தாய்
மணிபுலம்பலையும் நினைவில் வையாது
மகத்துவன் சரணடைந்தனையோ
கடவுளே இத்தப்படியிலுன் பக்தர்
கடப்பது உன்திருச்செயலே
கடந்தவருண்ணில் ஐக்கமுற்றாய்
கருணைசெய் ஏசுநாயகனே.

ஆசிரிய விருத்தம்.

வி. வி. காய் (2)

பத்தன்தே வசிகா மணிபாடும்
பண்செயும் ஆஞ்சுகள் போற்றுமணி
சுத்தனே கர்த்தனே சோதிமணி
சாத்திரர் கோத்திரர் தூணமணிமண்
டித்தனே ஆள்கொளும் புண்யமணி
பேசுதற்கு இகமான பொலாமணிநீ
நித்தனே வேதநா யகன்பாடும்
நேத்திர ஒத்தமணி நெஞ்சிமணியே.

சங்கை பொருந்திய எலியா தேவசிகாமணி சாஸ்திரியாரவர்கள் 1908-ஆம் செப்டெம்பர் மீ 9உ சென்னையில் கர்த்தருடைய இராச்சியம் சேர்ந்த செய்தி கேட்டபோது கனம் தேவசகாய வேதானந்த சாஸ்திரியார் கோலாலம்பூரிலிருந்து எழுதிய துயரக்கவி.

வெண்பா.

தஞ்சைக் கடிதம் வரமிகுசேவை காத்திருந்தும்
நெஞ்சைப் பிளந்துடைக்கும் நேரிடிபோல்-சஞ்சலமே
என்செயலாம் என்னருமைச் சின்னையா--உன்சமூகம்
பொன்னகர்க்கே ஏகினதி னால். (1)

தஞ்சைச் சுவிசேட தீபன் கலியெலியா
துஞ்சினனோ தோதமா--யென்செய்வோம்
அப்பாநீ யேகுசெயல நானறியா திங்கடைந்தீதன்
எப்போது காண்பதுனை நான். (2)

துயரக்கலிப்பா.

இக்கரை நாடொன்றிவர அடியேன் திரும்புமுன்னே
அக்கரைக்கே நாடிக்கர்த்தரண்டைக்கோடி விட்டாய்
எக்கால முன்றன் இன்பமுகம் யானடைவேன்
பக்கென் றடிக்குதையோபாவிநெஞ்ச மென்செயலாம்.

எத்தனையோ ராசுங்கள் எத்தனையோ கீர்த்தனைகள்
ஆத்தனையும் போட்டுவிட்டே அவசரத்திலே கிறிஸ்து
கத்தனைத் தாரென்று கடிவிரைவாய்ப்போகுசெயல்
இத்தனையும் யானறியேன் என்செய்வே னையாவே.

ஒத்தையாய்க் காத்தனைப்போய்க் காணமனங் கொள்
அந்தன் சேஞ்திபதி சம்பந்தி தோழமையாயச்[ளாமல்
சித்தப்பா நீரேசித்திரமாம் ஜீவியமே [ந்தாய்.
ஒதுசீசென்றூல்கலமென்றோர்கிழமைதான்தெரி

By Bhagavather M. Vedanayagam Pillai.

ஒப்பாரி.

1. அங்கமெல்லாம் பொங்கவோ
அடிவயிறு கோகவோ
தூங்க னெலியா
தூரமாய்ப் போனசெயல்

2. தவித்துப் புலம்பவோ
தள்ளாடி நிற்கவோ
கவிங்க னெலியா
கடைவழிக்கு சென்றதுவோ

3. கலங்கவோ எனறனுள்ளம்
கண்ணீருஞ் சொரியவோ
புலவ னெலியா
பிரவேசஞ் செய்ததுவோ.

4. தஞ்சை முழுவதும்
தத்தளித்துப் போகாதோ
நெஞ்சங் கரைந்து
நெடுந்துயரங் கொள்ளாதோ.

5. தஞ்சையோ ருன்முடிவு
தங்களிட மென்றிருந்தும்
சென்னையோ ருன்வரவை
சங்கைசெய் தியரடைந்தார்.

6. ஈட்டமுட னேசுவைத்தன்
நாயகனென் றேநம்பி
பாட்ட னெலியாவே
பரதேசு சென்றையோ.

7. பாடினுய் சுவிசேடப்
பாடலா யேசுவைநீ
கூடினுயக் காத்தருண்டைக்
கேதினு யையாவே

A 17408
Acc. No: 6


27
This Book can be had from.
E. VETHABOTHAGUM PILLAI,
The Evangelical Hall,
Tanjore.
FREE OF COST.
N.B.—Outsiders are kindly requested to send One Anna Stamp for posting each copy.